DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**S.T.C.No. 495/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | மகாலிங்கம் | Age | : | 45 |
| F/N | : | மாரிமுத்து | Occupation | : | மீன் ஏஜென்ஸி தொழில் |
| Village | : | மருதுபாண்டியர் நகர், இராமேஸ்வரம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 02-nd day of November 2022.

**02.11.2022.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எதிரி எனக்கு மகன் முறை ஆவார். எனக்கும், எதிரிக்கும் 20 வருடங்களாக பழக்கம் உள்ளது. நான் மீன் தொழில் செய்வதற்கான ஆவணங்களையும், ஏஜென்ஸி நடத்துவதற்கான ஆவணங்களையும், ரியல் எஸ்டேட் செய்வதற்கான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன மூன்று தொழிலுக்கு உண்டான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஏஜென்ஸி நடத்துவதற்கான ஆவணத்தை மட்டும் என்னால் தாக்கல் செய்ய முடியும். ரியல் எஸ்டேட் தொழில் மற்றும் மீன் தொழில் செய்வதற்கான உரிமம் என்னிடம் இல்லை.

**2.** என்னுடைய ஏஜென்ஸியில் வங்கி மூலம் தான் பண பரிவர்த்தனை செய்வேன் என்றால் வங்கி மூலமும் செய்வேன், நேரடியாகவும் பணம் கொடுப்பேன். நான் எத்தனை வருடங்களாக ஏஜென்ஸி தொழில் செய்து வருகிறேன் என்றால் 4 வருடங்களாக செய்து வருகிறேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பும், தாக்கல் செய்யும் போதும் நான் ஏஜென்ஸி தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஏஜென்ஸி தொழிலுக்கு உண்டான உரிமத்தை தாக்கல் செய்தால் நான் எந்த ஆண்டில் இருந்து ஏஜென்ஸி தொழில் செய்து வருகிறேன் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பும், தாக்கல் செய்யும் போதும் ஏஜென்ஸி தொழில் செய்யவில்லை என்றாலும், அதனால் தான் நான் அந்த ஏஜென்ஸிக்கு உரிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**3.** இராமேஸ்வரத்தில் குடியிருக்கும் சம்பத் மற்றும் தென்னரசு ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பத் என்பவருக்கு எதிராக இராமேஸ்வரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பத் மற்றும் தென்னரசு

ஆகியோர்கள் எதிரிக்கு ஒரு சொத்தை விற்றார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கிரைய பத்திரம் உண்டாக்கும் போது எதிரி சம்பத் மற்றும் தென்னரசு ஆகியோர்களிடம் ரூ. 4,00,000/–த்திற்கு இரண்டு நிரப்பப்படாத காசோலைகளை கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**4.** மேற்படி சம்பத் மற்றும் தென்னரசுக்கு எதிரியிடமிருந்து சொத்தை வாங்கும் போது நான் தரகராக செயல்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பத் மற்றும் தென்னரசு ஆகியோர்களை நீதிமன்றத்தில் விசாரித்தால் நான் அவர்களுக்கு தரகராக செயல்பட்ட விவரம் தெரிய வரும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி தென்னரசு என்பரிடமிருந்து சொத்தை மே மாதம் 2017–ம் ஆண்டு வாங்கினார் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது.

**5.** எதிரி என்னிடம் தொழில் சம்பந்தமாக கடந்த 01.05.2018 அன்று பணம் கேட்டார். நான் 10.05.2018 அன்று எதிரிக்கு என்னுடைய வீட்டில் வைத்து பணம் வழங்கினேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் என்னால் உடனடியாக பணத்தை ஏற்பாடு செய்ய முடியும். ஏன் நான் 10 நாட்கள் கழித்து பணம் கொடுத்தேன் என்றால் எதிரி கேட்ட தொகை அதிக தொகை என்பதாலும் அந்த சமயத்தில் என்னிடத்தில் பணம் இல்லாத காரணத்தினாலும் நான் பணத்தை 10.05.2018 அன்று கொடுத்தேன். மேற்படி எதிரிக்கு கொடுத்த தொகையை எவ்வாறு நான் ஏற்பாடு செய்தேன் என்றால் என்னிடம் கொஞ்சம் பணம் இருந்தது மீதி தொகையை இராமேஸ்வரத்தில் வசிக்கும் என்னுடைய உறவினரான நாகேந்திரன் என்பவரிடமிருந்து வாங்கினேன். நாகேந்திரனிடமிருந்து எவ்வளவு தொகை வாங்கினேன் என்றால் ரூ. 10,00,000/– வாங்கினேன்.

**6.** அவரிடமிருந்து நான் மேற்சொன்ன பணத்தை ரொக்கமாக 07.05.2018 அன்று வாங்கினேன். நாகேந்திரன் என்பவரை விசாரித்தால் அவரிடமிருந்து நான் ரூ. 10,00,000/– வாங்கிய விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். கடந்த டிசம்பர் மாதம் 2016 ம் ஆண்டு முதல் ரூ. 2,00,000/–த்திற்கு மேல் ஒருவருக்கு பணம் கொடுத்தால் அதை வங்கி பரிவர்த்தனை மூலம் தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு ரூ. 15,00,000/– கொடுத்ததற்கு என்னுடைய வருமான வரி கணக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. 2018–ம் நிதியாண்டிற்கு நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**7.** நான் 2018–ம் ஆண்டில் ஏஜென்ஸி தொழில் செய்திருந்தால் சேல்ஸ் டேக்ஸ் ரசீதை வருமான வரி துறையினரிடம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் ஏஜென்ஸி தொழில் செய்தேன் ஆனால் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. நான் ஏஜென்ஸி தொழில் 2018–ம் ஆண்டு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 10.05.2018 அன்றே எதிரியிடமிருந்து காசோலையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி காசோலையில் என்னுடைய பெயரையும், தொகையையும் எதிரி தான் என் முன்னிலையில் ஒரே பேனாவில் எழுதி கையொப்பமிட்டார். காசோலையில் கையெழுத்து ஒரு பேனாவாலும், என்னுடைய பெயர், அதன் கீழுள்ள தொகை மற்றும் தேதி ஒரு பேனாவாலும், எண்ணில் உள்ள தொகை ஒரு பேனாவாலும் எழுதப்பட்டிருக்கிறது என்றால் எதிரி தான் எழுதினார் அவர் ஒரே பேனாவில் தான் எழுதினார்.

**8.** மேற்சொன்ன மூன்று பேனா மையிற்கும் எனக்கு வித்தியாசம் தெரிகிறதா என்றால் தெரியவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில்

எதிரியிடமிருந்து காசோலையை பெறவில்லை என்றாலும் இந்த வழக்கின் காசோலை மே மாதம் 2017–ம் ஆண்டு எதிரியால் சம்பத் மற்றும் தென்னரசு ஆகியோர்களிடம் கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத காசோலை என்றாலும் சரியல்ல. எதிரி எத்தனை நாட்களில் பணத்தை திருப்பி தருவதாக சொன்னார் என்றால் லோன் போட்டிருக்கிறேன் 5 மாதத்தில் திருப்பி தந்து விடுகிறேன் என்று சொன்னார்.

**9.** நான் எதிரியிடமிருந்து எந்த தேதியில் பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் 2018–ம் ஆண்டு 10 வது மாதம் 5 ம் தேதியைப் போல் கேட்டேன். அவர் நான் கொடுத்த காசோலையை பயன்படுத்தி வங்கி மூலம் பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். மேற்சொன்ன 5 மாதத்தில் எதிரி பணத்தை திருப்பி கொடுப்பதாக சொன்ன விவரத்தையும், நான் 05.10.2018 அன்று எதிரியிடம் பணத்தை கேட்டது பற்றியும், அதற்கு அவர் வங்கி மூலம் பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார் என்ற விவரத்தையும் என்னுடைய மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

**10.** இந்த வழக்கின் விவரத்தை என்னுடைய வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன். மனுவிலும், வாக்குமூலத்திலும் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்து தான் நான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். மனுவில் சொன்னபடி 10.05.2018–ம் தேதி கொடுத்த காசோலையை 12.10.2018–ம் தேதி கலெக்சனுக்கு வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்சொன்ன காசோலையை கலெக்சனுக்கு 5 மாதத்திற்கு முன்பே எதிரி என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கு இராமேஸ்வரத்தில் வங்கி கணக்கு இருந்தும் ஏன் இராமநாதபுரத்தில் உள்ள வங்கியில் காசோலையை கலெக்சனுக்கு செலுத்தினேன் என்றால் நான் இராமநாதபுரம் கரூர் வைஸ்யா வங்கியில் லோன் வாங்கியிருந்தேன் அதுமட்டுமில்லாமல் பெரிய தொகைக்கான காசோலைகளை மேற்சொன்ன வங்கியில் தான் செலுத்துவேன்.

**11.** மேற்படி எதிரி சம்பத் மற்றும் தென்னரசு ஆகியோர்களிடம் நிலத்தை வாங்கியதற்கான ரூ. 4,00,000/–த்தை செலுத்திவிட்டு மேற்சொன்ன காசோலையை கொடுத்துவிடும்படி கேட்டார் என்றாலும், அதற்கு அவர்கள் தரகரான என்னிடம் அந்த காசோலையை கொடுத்துவிட்டதாக சொன்னார்கள் என்றாலும், எதிரி என்னிடம் காசோலையை கேட்டதற்கு எனக்கு எதிரி கமிசன் தரவேண்டும் என்று சொல்லி மேற்படி காசோலையை பொய்யாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்ததிலிருந்து இன்று வரை நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் காசோலை Return ஆன பின் அதை குறித்து என்னுடைய வருமான வரி கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் காசோலையை எதிரி எனக்கு தரவில்லை என்றாலும், அதனால் என்னுடைய மனு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். II**
**இராமநாதபுரம்**